செய்தி வெளியீடு எண்: 232/2018 நாள்: 18.04.2018

**வேலூர் மாவட்டம் வாலாஜா நகராட்சிக்கு ரூ.20 இலட்சம் மதிப்பில் தனியார் பங்களிப்புடன் 25 குப்பை தொட்டிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்!**

வேலூர் மாவட்டம் வாலாஜா நகராட்சியில் நடைபெற்ற விழாவில் நகராட்சிக்கு தேவையான 25 குப்பை தொட்டிகள் தனியார் நிறுவனங்கள் பங்களிப்பில் ரூ.20 இலட்சம் மதிப்பில் நகராட்சி நிர்வாகத்திடம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சிக்கு இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.காந்தி அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:-

வாலாஜா நகராட்சி தமிழ்நாட்டின் முதல் நகராட்சியாகும். பாண்டிச்சேரியும் வாலாஜாவும் சரியான திட்டமிடலுடன் அமைக்கப்பட்ட நகராட்சிகள். இந்த வாலாஜா நகராட்சியில் மழைநீரோ அல்லது கழிவுநீரோ தேங்காமல் கால்வாய்கள் நல்ல வடிகால் அமைப்புடன் கட்டமைக்கப்பட்டுள்ளது. வேலூர் கோட்டையை போன்று அனைத்து அடிப்படை வசதிகளுடன் கட்டமைக்கப்பட்டது இந்த வாலாஜா நகராட்சி. நான் வாலாஜா நகராட்சிக்கு கடந்த சில மாதங்களுக்கு முன் டெங்கு ஆய்வு செய்ய வந்தபோது போதிய அளவு குப்பை தொட்டிகள் நகராட்சியில் இல்லை என்பதை அறிந்தேன். தற்போது சட்டமன்ற உறுப்பினரின் முயற்சியில் ரூ.20 இலட்சம் மதிப்பிலான 25 குப்பைத் தொட்டிகள் தனியாரின் பங்களிப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டு இந்த நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது. இதற்காக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் நன்கொடை வழங்கிய தனியார் நிறுவனங்களுக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இதே போன்று தனியார் நிறுவனங்களின் சமூக பங்களிப்பு நிதி (Corporate – Social responsibilities) திட்டத்தில் தனியார் நிறுவனங்கள் மாவட்டத்தின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு நிதியுதவி அளிக்க முன்வர வேண்டும். ஏற்கனவே பல நிறுவனங்கள் இதுபோல CSR நிதியை அளித்துள்ளன. மேலும் நகராட்சிகளில் சேகரிக்கப்படும் குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் மறுசுழற்சி செய்யப்படுகின்றன. குறிப்பாக இக்குப்பைகளிலிருந்து தயாரிக்கப்படும் உரம் விவசாயத்திற்கு பயன்படுகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் பேசினார்கள்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்களும் இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.காந்தி அவர்களும் 25 குப்பைத் தொட்டிகளை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் முனைவர்.சி.விஜயகுமார், அவர்களிடம் பயன்பாட்டிற்காக வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி நகராட்சி ஆணையாளர் (வாலாஜா) திரு.அசோக்குமார், துப்புரவு அலுவலர் திரு.பழனிசாமி, வட்டாட்சியர் திரு.விஜயகுமார் மற்றும் பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்.